ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1634/28 - 2010 ජනවාරි 01 වැනි සිකුරාදා - 2010.01.01

*1634/28 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ், கண்டி கடவத்சதரயும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் துணைத் தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

துணைத் தவிசாளர், தவிசாளர் பதவிக்காக நியமிக்கப்பட்டதன் காரணமாக கண்டி கடவத்சதரயும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் துணைத் தவிசாளர் ஒருவரது பதவி வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

கண்டி கடவத்சதரயும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் துணைத் தவிசாளர் தென்னக்கோன் முதியன்சேலாகே சுரேந்திர பண்டார என்பவர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியைச் சேர்ந்தவராக இருக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர், அத்தகைய கட்சியைச் சேர்ந்தவரும் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் துணைத் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக வெளிப்படுத்தப்பட வேண்டியவருமான கண்டி கடவத்சதரயும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் உறுப்பினரைத் தீர்மானிக்குமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 65அ (1) என்னும் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளார் ஆதலாலும் ;

மேலே கூறப்பட்டதான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. அகுரெட்டியகே நிமல் சந்ரசிறி என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது கண்டி கடவத்சதரயும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் யூ. அமரதாச ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. அகுரெட்டியகே நிமல் சந்ரசிறி என்பவர் கண்டி கடவத்சதரயும் கங்கவட்ட கோரளை பிரதேச சபையின் துணைத் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

யூ. அமரதாச,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கண்டி கடவத்சதரயும் கங்கவட்ட கோரளை
பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
கண்டி,
2009, திசெம்பர் 24.

1 - 502

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.